Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

| | |
|---|---|
| Calendar Miscellaneous<br>Preliminary Registered<br>Sessions | Case No. **S.C. No.1 of 2025** |
| Deposition of Witness for | : **PW11(LW15)** |
| Name | : திரு. வினோத்குமார் |
| Father's Name | : பெரியசாமி |
| Village | : சிக்கனம்பட்டி |
| Taluk | : பென்னாகரம் |
| Calling | : டிஜிட்டல் பேனர் கடை |
| Age | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.11.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பென்னாகரம் அரசு மருத்துவமனை அருகில் வினோத் டிஜிட்டல் பேனர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2024ம் வருடம் என் கடையில் சுமார் 3 மாதம் வேலை செய்து வந்தார். அவருக்கு சம்பளம் ரூ.9000/- கொடுத்தேன். கடந்த 01.11.2024ம் தேதி காலை வழக்கம்போல் கடைக்கு வந்தார். அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் நான் வெளியே செல்ல வேண்டியிருப்பதால் கடையை பூட்டி விடுகிறேன் என்று சொன்னார். நான்

அதற்கு சாவியை வழக்கும்போல் வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு செல் என்று கூறினேன். அன்று இரவு சுமார் 09.30 மணியளவில் TN 29 BM 2308 என்ற ஸ்பிலின்டர் வண்டியில் வந்தார். அப்போது அவர் படப்படப்பாக காணப்பட்டார். அப்போது அவர் அடுத்த 4 நாட்களுக்கு நான் கடைக்கு வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லி என்னிடம் கடை சாவியை கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். பின்னிட்டு சத்தியமூர்த்தி அசோக்குமாரை கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக 04.11.2024 ம் தேதி பாலக்கோடு வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

இரவு 09.30 மணிக்கு எதிரி வரும்போது வெளிச்சமாக இருந்தது, நான் எதிரியை நன்றாக முழுவதும் பார்த்தேன். அந்த நேரத்தில் எதிரியின் உடலில் வித்தியாசமாக ஏதாவது இருந்ததா என்றால் தெரியாது, நான் கவனிக்கவில்லை. எதிரி அணிந்திருந்த சட்டையில் பேன்டிலும் இரத்த கறை இருந்ததா என்றால் நான் கவனிக்கவில்லை. நான் சொல்வதுபோல் எதிரி இரவு 09.30 மணிக்கு வந்து கடையின் சாவியை கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அன்று முழுவதும் எதிரி கடையில்தான் இருந்தார் என்று சொல்வது சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க முதன்மை விசாரணையில் விவரங்கள் கூறியுள்ளேன் என்று சொல்வது சரியல்ல. ஸ்பிலின்டர் வாகனத்தை எடுத்து வந்த அன்று இரவு 09.30 மணிக்கு எதிரி என்னை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 10.11.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.11.10 15:46:36 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.